- **2026 ජනවාරි 01 දිනෙන් ආරම්භ වන හා 2026 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වන මුදල් වර්ෂයේ ප්‍රයෝජනය සඳහා 2025 අංක 23 දරන විසර්ජන පනතේ ශීර්ෂය 119 සහ ශීර්ෂය 102 - වැඩසටහන 01 යටතේ පරිපූරක මුදල**

- **1969 අංක 1 දරන ආනයන හා අපනයන (පාලන) පනත යටතේ රෙගුලාසි (2026 ඔක්තෝබර් 01 දිනැති අංක 2508/27 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)**

සම්බන්ධයෙන්

රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව

පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද්දේ

කාරක සභාවේ සභාපති

ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා විසිනි

2026 නොවැම්බර් මස 04 වැනි බදාදා

- **2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செலவினத் தலைப்புகள் 119 மற்றும் 102 - நிகழ்ச்சித்திட்டம் 01 ன் கீழான குறைநிரப்புத் தொகை**

- **1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் (2026 ஒக்தோபர் 01 ஆம் திகதிய 2508/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)**

தொடர்பிலான

அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கை

குழுவின் தவிசாளர்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களினால்

2026 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை

பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது

Report of the Committee on Public Finance

on

- **Supplementary Sum under Head 119 and Head 102 of Programme 01 of the Appropriation Act No. 23 of 2025 for the services of the financial year commencing on 01st January, 2026, and ending on 31st December, 2026**

- **Regulations under the Imports and Exports (Control) Act, No. 1 of 1969 (Published in the Gazette Extraordinary No. 2508/27 of 01st October 2026)**

Presented to Parliament

by

Hon. (Dr.) Harsha de Silva

Chair of the Committee

Wednesday, the 04th November 2026

කාරක සභා වාර්තාව

රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාව 2026 නොවැම්බර් මස 03 වැනි දින පැවැත් වූ එහි රැස්වීමේ දී පහත සඳහන් පරිපූරක මුදල සහ රෙගුලාසි සලකා බලන ලදී:

- **2026 ජනවාරි 01 දිනෙන් ආරම්භ වන හා 2026 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වන මුදල් වර්ෂයේ ප්‍රයෝජනය සඳහා 2025 අංක 23 දරන විසර්ජන පනතේ ශීර්ෂය 119 සහ ශීර්ෂය 102 - වැඩසටහන 01 යටතේ පරිපූරක මුදල**

  (2026 නොවැම්බර් 03 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලදුව කාරක සභාවට යොමු කරන ලද)

- **1969 අංක 1 දරන ආනයන හා අපනයන (පාලන) පනත යටතේ රෙගුලාසි (2026 ඔක්තෝබර් 01 දිනැති අංක 2508/27 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)**

  (2026 නොවැම්බර් 03 වැනි දින පාර්ලිමේන්තුවට ඉදිරිපත් කරන ලදුව කාරක සභාවට යොමු කරන ලද)

කාරක සභාව විසින් සලකා බැලූ දිනය: **2026** නොවැම්බර් **මස 03** **වේලාව : ප.ව. 02.00**

<u>පැමිණි රජයේ මුදල් පිළිබඳ කාරක සභා සභිකයන්</u>

1. ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා, පා.ම.,
2. ගරු චතුරංග අබේසිංහ මහතා, පා.ම.,
3. ගරු රවී කරුණානායක මහතා, පා.ම.,
4. ගරු හර්ෂණ රාජකරුණා මහතා, පා.ම.,
5. ගරු ෂානක්කියන් රාජපුත්තිරන් රාසමාණික්කම් මහතා, පා.ම.,
6. ගරු අජිත් අගලකඩ මහතා, පා.ම.,
7. ගරු එම්.කේ.එම්. අස්ලම් මහතා, පා.ම.,
8. ගරු නිමල් පලිහේන මහතා, පා.ම.,
9. ගරු විජේසිරි බස්නායක මහතා, පා.ම.,
10. ගරු සුනිල් රාජපක්ෂ මහතා, පා.ම.,
11. ගරු තිළිණ සමරකෝන් මහතා, පා.ම.,

- **2026 ජනවාරි 01 දිනෙන් ආරම්භ වන හා 2026 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වන මුදල් වර්ෂයේ ප්‍රයෝජනය සඳහා 2025 අංක 23 දරන විසර්ජන පනතේ ශීර්ෂය 119 සහ ශීර්ෂය 102 - වැඩසටහන 01 යටතේ පරිපූරක මුදල**

<u>හැඳින්වීම</u>

මැද පෙරදිග පවතින යුධමය වාතාවරණය හේතුවෙන් බලපෑමට ලක් වූ ජනතාවට තවදුරටත් සහන සැලසීම සඳහා අමාත්‍ය මණ්ඩලයේ අනුමැතිය ලැබී ඇත. ඒ අනුව, 2026 ඔක්තෝබර්, නොවැම්බර් සහ දෙසැම්බර් මාස සඳහා සුපිරි ඩීසල් හැර ඔටෝ ඩීසල් සහ කාර්මික ඩීසල් සඳහා මිල සහනාධාරයක් ලබා දීමටත්, අස්වැසුම සුබසාධක ප්‍රතිලාභ වැඩසටහන යටතේ ලියාපදිංචි අන්ත දිළිඳු සහ දුප්පත් කාණ්ඩවල පවුල් ඒකක සඳහා අමතර දීමනාවක් ලබා දීමටත් යෝජනා කර ඇත.

මෙම සහන වැඩසටහන් සඳහා අවශ්‍ය ප්‍රතිපාදන, දිට්වා සුළි කුණාටුව හේතුවෙන් ඇති වූ හදිසි ආපදා තත්ත්වයට අදාළව සහන සැලසීම සඳහා 2026 වර්ෂයේ වෙන් කරන ලද, විවිධ හේතු මත එම වර්ෂය තුළ උපයෝජනය නොවන බවට හඳුනාගෙන ඇති පුනරාවර්තන ප්‍රතිපාදන ඉතිරිවීම් තුළින් සලසා ගැනීමට යෝජනා කර ඇත. ඒ අනුව, 2025 අංක 23 දරන විසර්ජන පනතේ 7 වන වගන්තිය ප්‍රකාරව 240-2-04-000-1504-000-11 වැය විෂය විස්තරය යටතේ පවතින අදාළ ප්‍රතිපාදන ඉතිරිවීම් අවුරා තබා, එම ප්‍රතිපාදන බලශක්ති අමාත්‍යාංශයේ 119-1-02-011-1504-005-11 වැය විෂය විස්තරය යටතේ සහ මුදල්, ක්‍රම සම්පාදන හා ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශයේ 102-1-02-040-1501-033-11 වැය විෂය විස්තරය යටතේ නැවත ගැළපීමට යෝජනා කර ඇත.

මෙම ප්‍රතිපාදන නැවත ගැළපීම හේතුවෙන් රජයේ ණය ගැනීමේ සීමාව සංශෝධනය කිරීමේ අවශ්‍යතාවයක් පැන නොනඟී.

<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- ඔක්තෝබර් සිට දෙසැම්බර් දක්වා කාලය සඳහා ඔටෝ ඩීසල් සහනාධාරය වෙනුවෙන් රුපියල් බිලියන 41 ක් සහ නොවැම්බර් සහ දෙසැම්බර් මාස සඳහා අස්වැසුම ප්‍රතිලාභීන් සඳහා වන අමතර දීමනා වෙනුවෙන් රුපියල් බිලියන 6 ක් ඇතුළත්ව රුපියල් බිලියන 47 ක ප්‍රතිපාදනයක් වෙන් කර ඇත. අස්වැසුමලාභී අන්ත දිළිඳු කාණ්ඩය සඳහා නොවැම්බර් මාසය සඳහා රුපියල් 3,000 ක සහ දෙසැම්බර් මාසය සඳහා රුපියල් 3,250 ක දීමනාවක් ද , දුප්පත්

කාණ්ඩය සඳහා එකී එක් එක් මාසය සඳහා රුපියල් 2,000 බැගින් ද මෙම අමතර දීමනාව ලබා දෙන බව කාරක සභාව වැඩිදුරටත් නිරීක්ෂණය කළා ය.

- සංක්‍රාන්තික (transient) සහ අවදානමට ලක්වූ (vulnerable) කාණ්ඩ අදියර වශයෙන් ඉවත් කෙරෙමින් පවතී.

- අභියාචනා ඇගයීම සඳහා මාසයක කාලයක් වෙන් කරමින් ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාස මට්ටමින් අභියාචනා කමිටුවක් ස්ථාපනය කර තිබූ අතර, 2023 වර්ෂයේදී අභියාචනා මිලියන 1.1 ක් සහ විරෝධතාවයන් 80,000 ක් පමණ ලැබී තිබූ නමුදු වර්තමානයේ විරෝධතාවයන් සංඛ්‍යාව 500 ක් පමණ වන බව කාරක සභාව වැඩිදුරටත් නිරීක්ෂණය කළා ය. නැවත සහතික කිරීමේ අරමුණ සඳහා, ග්‍රාම නිලධාරී නිලධාරියෙකු සහ වෙනත් රජයේ නිලධාරියෙකුගෙන් සමන්විත ඇගයීම් කණ්ඩායමක් අදාළ ගෘහ ඒකකය වෙත ගොස් එහි තත්ත්වය ඇගයීමට ලක් කරන අතර, ඉන් අනතුරුව තෝරා ගැනීමේ කමිටුව විසින් අවශ්‍ය තීරණය ගනු ලැබිය හැකි බව ද කාරක සභාව නිරීක්ෂණය කළා ය.

- ජනවාරි සිට සැප්තැම්බර් දක්වා කාලය සඳහා පිරිපහදුවේ අනුමිත ලාභය ඇමරිකානු ඩොලර් මිලියන 417.8 ක් වූ අතර, එය පිරිපහදුවක් නොමැති තත්ත්වයකට සාපේක්ෂව පිරිපහදුව ක්‍රියාත්මක වීම හේතුවෙන් ඉන්ධන ආනයන පිරිවැයේ සිදු වූ ඇස්තමේන්තුගත ඉතිරිය නිරූපණය කරයි.

- ගුවන් යානා ඉන්ධන අවශ්‍යතාවයෙන් 65% ක් පමණ සහ දැව් තෙල් අවශ්‍යතාවයෙන් 100% ක් ම සපුගස්කන්ද තෙල් පිරිපහදුව මගින් නිපදවන ලද අතර, පෙට්‍රල් අවශ්‍යතාවයෙන් 10% ක් පමණ සහ ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාවේ (CPC) සමස්ත සැපයුමෙන් 30% ක් පමණ දේශීයව පිරිපහදු කර සකස් කරනු ලබන බව කාරක සභාව වැඩිදුරටත් නිරීක්ෂණය කළා ය. 2026 වර්ෂයේ මේ දක්වා කාලය තුළ ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාව මගින් පිරිපහදු කළ ඔටෝ ඩීසල් ලීටර් බිලියන 4.49 ක් සහ පිරිපහදු කළ පෙට්‍රල් 92 ලීටර් බිලියන 4.6 ක් ආනයනය කර ඇති බව ද කාරක සභාව නිරීක්ෂණය කළා ය.

- ඩීසල් වෙළඳපල තුළ ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාවේ වෙළඳපල කොටස ජනවාරි මාසයේ පැවැති 60% සිට වර්තමානය වන විට 77% දක්වා ඉහළ ගොස් තිබූ අතර, RM Parks, Sinopec සහ Shell යන සමාගම් ලැබූ අලාභ හේතුවෙන් එම සමාගම්වල අදාළ සැපයුම් ප්‍රමාණයන් පහත වැටීම නිසා ඒවායේ වෙළඳපල කොටස් ක්‍රමයෙන් පහත වැටී තිබුණි.

- පිරිපහදුව ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාවෙන් වෙන් කිරීමේ හැකියාව පිළිබඳව සාකච්ඡා පැවැත්වී තිබූ අතර, වෙනත් ඉන්ධන සිල්ලර වෙළෙන්දන්ගේ මාතෘ සමාගම් සතුව විදේශයන්හි පිරිපහදු පවතින බැවින් එම සමාගම්වලට තම පිරිපහදුවලින් ඉන්ධන ආනයනය කර දේශීයව බෙදා හැරීමට හැකි විය යුතු බවට ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාවේ සභාපතිවරයා ලබා දුන් පිළිතුර කාරක සභාව නිරීක්ෂණය කළා ය.

- බලශක්ති අමාත්‍යාංශය සහ විදේශීය ඉන්ධන සිල්ලර වෙළෙන්දන් අතර ගිවිසුම් මගින් උපරිම මිල සීමාවක් (ceiling price) නියම කර තිබූ අතර, නියමිත සූත්‍රයට අනුකූලව එම සමාගම් මගින් ගණනය කරනු ලබන සිල්ලර මිල ගණන් අලාභයකට හේතු වන අවස්ථාවලදී එම වෙනස භාණ්ඩාගාරය මගින් දැරීමට සිදුව තිබූ බවත්, කෙසේ වෙතත් අමාත්‍යාංශය මගින් ප්‍රකාශයට පත් කරනු ලබන්නේ ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාවේ මිල සූත්‍ර පත්‍රිකා පමණක් වන අතර අනෙකුත් ඉන්ධන සිල්ලර වෙළෙන්දන්ගේ මිල සූත්‍ර පත්‍රිකා හෙළිදරව් කර නොමැති බවත් කාරක සභාව නිරීක්ෂණය කළා ය.

- විදේශීය ඉන්ධන සිල්ලර වෙළෙන්දන්ගේ සහ ලංකා ඛනිජ තෙල් නීතිගත සංස්ථාවේ තනි තනි ගොඩබෑම් පිරිවැය (landing costs) අතර සැලකිය යුතු වෙනස්කම් පැවැතුණු අතර, ගොඩබෑම් පිරිවැය තීරණය කිරීම සඳහා සිංගප්පූරු ප්ලැට්ස් (Singapore Platts) පදනම් කරගත් මිනුම් ලකුණක් භාවිත කිරීමට සභාපතිවරයා විසින් කරන ලද යෝජනාව කාරක සභාව නිරීක්ෂණය කළා ය.

- දේශීය වෙළඳපලට සැපයිය යුතු නිෂ්පාදන අනුපාතය වැඩි කරන ලෙස සිනොපෙක් සමාගම ඉල්ලා සිටීම හේතුවෙන් හම්බන්තොට යෝජිත සිනොපෙක් (Sinopec) පිරිපහදුවේ ඉදිකිරීම් ඉදිරියට ගොස් නොතිබුණේ ය.

- ඉන්ධන සඳහා අදාළ වන බදු සංරචක අතරට නිෂ්පාදන බද්ද (Excise Duty) සහ එකතු කළ අගය මත බද්ද (VAT) ඇතුළත් වූ අතර, එය පෙට්‍රල් ලීටරයකට රුපියල් 50 ක සංරචකයක් ඇතුළුව රුපියල් 145 ක් ද, ඩීසල් ලීටරයකට රුපියල් 127 ක් ද වූ අතර, බොරතෙල් බැරලයකට 2.5% ක වරාය හා ගුවන් තොටුපළ සංවර්ධන බද්දක් (PAL) අදාළ වන බව කාරක සභාව වැඩිදුරටත් නිරීක්ෂණය කළා ය.

- ඉලක්කගත ඉන්ධන සහනාධාර හඳුන්වා දීම පිළිබඳව සාකච්ඡා කරමින් පවතී.

<u>කාරක සභාවේ නිර්දේශ</u>

කරුණු සලකා බැලීමෙන් පසුව කාරක සභාව විසින් පහත නිර්දේශය ඉදිරිපත් කළා ය.

- නවතම ගෘහ ආදායම් හා වියදම් සමීක්ෂණ (HIES) දත්ත සලකා බලමින්, අස්වැසුම සුබසාධක ප්‍රතිලාභ යෝජනා ක්‍රමය සහ තහවුරු කිරීමේ ක්‍රියාවලිය සම්බන්ධ නවතම වර්ධනයන් සමාලෝචනය කිරීම සඳහා ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන දෙපාර්තමේන්තුව සහ සමාජ ආරක්ෂණ මණ්ඩලය සමග සාකච්ඡාවක් පැවැත්විය යුතුය.

- සිල්ලර වෙළෙඳුන් අතර මිල ගණන්වල පුළුල් විෂමතා ඇතිවීම වැළැක්වීම සඳහා, ඉන්ධන මිල සූත්‍රය තුළ ගොඩබෑමේ පිරිවැය ගණනය කිරීමේදී සිංගප්පූරු Platts මිල දර්ශකය මත පදනම් වූ මිණුම් දර්ශකයක් භාවිත කිරීම පිළිබඳව බලශක්ති අමාත්‍යාංශය සලකා බැලිය යුතු බව නිර්දේශ කරන ලදී.

- පාරිභෝගික සුබසාධනය සහ ඉන්ධන සිල්ලර වෙළෙඳපොළ තුළ පවතින තරගකාරීත්වය යන කරුණු දෙකම සමතුලිත වන පරිදි ඉන්ධන සඳහා උපරිම සිල්ලර මිලක් (Ceiling Price) ප්‍රකාශයට පත් කළ යුතු බව බලශක්ති අමාත්‍යාංශයට නිර්දේශ කරන ලදී.

- **1969 අංක 1 දරන ආනයන හා අපනයන (පාලන) පනත යටතේ රෙගුලාසි (2026 ඔක්තෝබර් 01 දිනැති අංක 2508/27 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)**

<u>හැඳින්වීම</u>

ජාතික ආර්ථිකය, මහජන සෞඛ්‍යය සහ පරිසරය සුරක්ෂිත කිරීමේ අරමුණින්, සංයෝජිත වර්ගීකරණ සංකේතාංක 304ක් යටතේ වර්ග කර ඇති භාණ්ඩ වර්ග 161ක් ආනයනය කිරීමේදී ප්‍රමිතිකරණය සහ ගුණාත්මකභාවය තහවුරු කිරීම සඳහා ප්‍රමිතිකරණ සහ තත්ත්ව පාලන රෙගුලාසි, 1969 අංක 1 දරන ආනයන හා අපනයන (පාලන) පනත යටතේ පනවා 2024 මැයි මස 17 දිනැති අංක 2384/35 දරන ගැසට් පත්‍රයේ ප්‍රකාශයට පත්කර ඇත.

මේ අතර, දේශීය නිෂ්පාදකයින්ට සාධාරණ තරහකාරී පසුබිමක් සහතික කිරීම සහ පාරිභෝගික ආරක්ෂාව හා සුරක්ෂිතතාව තහවුරු කිරීම අරමුණු කරගනිමින්, මගී මෝටර් රථ සඳහා භාවිත කරනු ලබන ටයර් සහ ත්‍රිරෝද මෝටර් රථ සඳහා වන වායු පිරවූ ටයර් යන ආනයනික ටයර් වර්ග සඳහා ආනයන පරීක්ෂණ ක්‍රමවේදය එනම් ශ්‍රී ලංකා ප්‍රමිති නියම කිරීමට කර්මාන්ත හා ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශය නිර්දේශ කර ඇත. ඒ අනුව, 1969 අංක 1 දරන ආනයන හා අපනයන (පාලන) පනත යටතේ වන ප්‍රමිතිකරණ සහ තත්ත්ව පාලන රෙගුලාසි සඳහා සංශෝධන ඇතුළත් කරමින් නව රෙගුලාසි නිකුත් කිරීමට මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය තීරණය කරන ලදී.

ඒ අනුව, මගී මෝටර් රථ ටයර් (HS කේතය 4011.10.90) ආනයන සඳහා ශ්‍රී ලංකා ප්‍රමිති 1212 නියම කරමින් සහ ත්‍රිරෝද මෝටර් රථ සඳහා වන වායු පිරවූ ටයර් (HS කේතය 4011.90.10) ආනයන සඳහා ශ්‍රී ලංකා ප්‍රමිති 1347 නියම කරමින්, 2026 අංක 08 දරන ආනයන හා අපනයන (පාලන) රෙගුලාසි පනවා 2026 ඔක්තෝබර් 01 දිනැති අංක 2508/27 දරන අතිවිශේෂ ගැසට් පත්‍රයේ ප්‍රකාශයට පත් කරන ලදී. මෙම රෙගුලාසි 2027 ජනවාරි 01 දින සිට බලාත්මක වේ.

<u>කාරක සභාවේ නිරීක්ෂණ</u>

කාරක සභාව විසින් පහත කරුණු පිළිබඳව නිරීක්ෂණය කළා ය.

- පැරා -තීරුබදු (para-tariffs) ඉවත් කිරීම අරමුණු කරගත් ප්‍රතිපත්ති මාලාවේ කොටසක් ලෙස මෙම ප්‍රමිතීන් නිකුත් කර ඇති අතර, සංයෝජිත වර්ගීකරණ සංකේතාංක (HS codes) 304ක් යටතට ගැනෙන භාණ්ඩ සඳහා එම ප්‍රමිතීන් නිකුත් කර තිබූ අතර, මගී වාහන සහ ත්‍රිරෝද රථ සඳහා භාවිත කරන ටයර් සඳහා ද ප්‍රමිතීන් නිකුත් කරන ලෙස කර්මාන්ත ක්ෂේත්‍රය විසින් ඉල්ලීමක් කර තිබුණි.

- මාස තුනක සහන කාලයක් ලබා දී තිබූ අතර අදාළ ගැසට් නිවේදනය වාණිජ දෙපාර්තමේන්තුව හරහා ලෝක වෙළඳ සංවිධානය වෙත දැනුම් දෙමින් පවතින බවත්, අවශ්‍ය නම් මෙම සහන කාලය දීර්ඝ කළ හැකි බවත් කාරක සභාව වැඩිදුරටත් නිරීක්ෂණය කළා ය.

- මෙම ප්‍රමිතීන් ජාත්‍යන්තර ප්‍රමිතිකරණ සංවිධාන ප්‍රමිතීන්ට සමාන ද යන්න සහ එම ප්‍රමිතීන් ම අනුගමනය නොකළේ මන්දැයි කළ විමසුමකට පිළිතුරු වශයෙන්, යුරෝපයේ සහ ඕස්ට්‍රේලියාවේ වාහනවලට වඩා ශ්‍රී ලංකාවේ වාහන මගින් ගෙන යනු ලබන බර ප්‍රමාණය වැඩි බව සලකා බලමින් ශ්‍රී ලාංකික තත්ත්වයන්ට ගැළපෙන පරිදි ප්‍රමිතීන් සුළු වශයෙන් සංශෝධනය කර ඇති බව ප්‍රකාශ වූ අතර, ත්‍රිරෝද රථ ටයර් සඳහා වන ප්‍රමිතීන් සකස් කිරීමේදී ඉන්දීය ප්‍රමිතීන් ද සලකා බලා තිබුණි.

- ටයර් පරීක්ෂා කිරීම සඳහා ශ්‍රී ලංකා ප්‍රමිති ආයතනය සතුව පූර්ණ ධාරිතාවක් නොතිබූ අතර අවශ්‍ය පරීක්ෂණ ධාරිතාව ස්ථාපනය කිරීම සඳහා ප්‍රසම්පාදන කටයුතු සිදුවෙමින් පැවති බවත්, මුල් ගැසට් නිවේදනය යටතේ ආනයනකරුවන්ට අපනයනය කරන රටෙන් සහතික ලබා ගත හැකි අතර ශ්‍රී ලංකා ප්‍රමිති ආයතනයට විදේශීය පරීක්ෂණාගාරවල වලංගුභාවය තහවුරු කළ හැකි බවත්, ඒ අනුව දේශීය සහතික කිරීමක් අවශ්‍ය වන්නේ පිළිගත් විදේශීය තත්ත්ව සහතික කිරීමක් නොමැති අවස්ථාවලදී පමණක් බවත් කාරක සභාව වැඩිදුරටත් නිරීක්ෂණය කළා ය.

- නිෂ්පාදකයින් 18 දෙනෙකු කර්මාන්ත හා ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශයේ ලියාපදිංචි වී තිබූ අතර ඝන වායු පිරවූ ටයර් (solid pneumatic tyres) නිෂ්පාදකයින් අටදෙනෙකු සිටි බව ය.

කාරක සභාවේ නිර්දේශ

කරුණු සලකා බැලීමෙන් පසුව කාරක සභාව විසින් පහත නිර්දේශය ඉදිරිපත් කළා ය.

- ටයර් කර්මාන්තයේ නිෂ්පාදන ධාරිතාව, හැකියාවන්, වෙළඳපල කොටස සහ ප්‍රධාන කර්මාන්තකරුවන් ආවරණය වන පරිදි පසුබිම් සටහනක් කාරක සභාව වෙත ඉදිරිපත් කළ යුතුය.

- ටයර් සඳහා වන ප්‍රමිති සම්බන්ධ ගැසට් නිවේදනය පූර්ණ වශයෙන් ක්‍රියාත්මක කිරීම, අවශ්‍ය පරීක්ෂණ පහසුකම් ස්ථාපිත කිරීම සඳහා ශ්‍රී ලංකා ප්‍රමිති ආයතනයට (SLSI) සහ අදාළ ක්ෂේත්‍රයට නියමිත ප්‍රමිතීන්ට අනුකූල වීම සඳහා ප්‍රමාණවත් අමතර කාලයක් ලබා දෙන පරිදි දීර්ඝ කළ යුතු බව නිර්දේශ කරන ලදී.

කාරක සභාවේ තීරණය

කරුණු සලකා බැලීමෙන් පසුව,

- **2026 ජනවාරි 01 දිනෙන් ආරම්භ වන හා 2026 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වන මුදල් වර්ෂයේ ප්‍රයෝජනය සඳහා 2025 අංක 23 දරන විසර්ජන පනතේ ශීර්ෂය 119 සහ ශීර්ෂය 102 - වැඩසටහන 01 යටතේ පරිපූරක මුදල**

- **1969 අංක 1 දරන ආනයන හා අපනයන (පාලන) පනත යටතේ රෙගුලාසි (2026 ඔක්තෝබර් 01 දිනැති අංක 2508/27 දරන අති විශේෂ ගැසට් පත්‍රයේ පළ කරන ලද)**

සම්බන්ධයෙන් කාරක සභාව එකඟතාවය පළ කළ අතර, ඒ පිළිබඳ රජයේ මුදල් පිළිබඳ කාරක සභාවේ වාර්තාව, 2026 නොවැම්බර් මස 04 වැනි දින කාරක සභාවේ සභාපති ගරු (ආචාර්ය) හර්ෂ ද සිල්වා මහතා විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කළ යුතු බවට තීරණය කළා ය.

குழுவின் அறிக்கை

அரசாங்க நிதி பற்றிய குழு 2026 நவம்பர் மாதம் 03 ஆம் திகதி நடத்திய கூட்டத்தின் போது பின்வரும் குறைநிரப்புத் தொகை மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

- **2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செலவினத் தலைப்புகள் 119 மற்றும் 102 - நிகழ்ச்சித்திட்டம் 01 ன் கீழான குறைநிரப்புத் தொகை**
  (2026 நவம்பர் மாதம் 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது)

- **1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் (2026 ஒக்தோபர் 01 ஆம் திகதிய 2508/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)**
  (2026 நவம்பர் மாதம் 03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது)

குழுவினால் ஆராயப்பட்ட திகதி : 2026 நவம்பர் மாதம் 03 **நேரம்** : பி.ப. 02.00

கலந்துகொண்ட அரசாங்க நிதி பற்றிய குழுவின் அங்கத்துவ உறுப்பினர்கள் (03.11.2026)

1. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, பா.உ., (தவிசாளர்)
2. கௌரவ சதுரங்க அபேசிங்ஹ, பா.உ.,
3. கௌரவ ரவி கருணாநாயக்க, பா.உ.,
4. கௌரவ ஹர்ஷன ராஜகருணா, பா.உ.,
5. கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், பா.உ.,
6. கௌரவ அஜித் அகலகட, பா.உ.,
7. கௌரவ எம்.கே. எம். அஸ்லம், பா.உ.,
8. கௌரவ நிமல் பலிஹேன, பா.உ.,
9. கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க, பா.உ.,
10. கௌரவ சுனில் றாஜபக்ஷ, பா.உ.,
11. கௌரவ திலிண சமரகோன், பா.உ.,

- **2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செலவினத் தலைப்புகள் 119 மற்றும் 102 - நிகழ்ச்சித்திட்டம் 01 ன் கீழான குறைநிரப்புத் தொகை**

அறிமுகம்

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்து நிவாரணம் வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களுக்கு 'சூப்பர் டீசல்' (Super Diesel) தவிர்ந்த ஏனைய வாகன டீசல் (Auto Diesel) மற்றும் கைத்தொழில் டீசல் (Industrial Diesel) ஆகியவற்றிற்கு விலை மானியம் வழங்க அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. மேலும், இதே போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ், அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்தில் 'மிகவும் வறிய' மற்றும் 'வறிய' பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு மேலதிக 'கொடுப்பனவு ஒன்றையும் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2026 ஆம் ஆண்டில் பொதுப் பணிகளுக்காகச் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை, 2026 ஆம் ஆண்டின் இறுதி வரை பயன்படுத்த அனுமதிக்கும் பொருட்டு, மேற்கண்ட ஒதுக்கீட்டுத் தேவையானது, பல்வேறு காரணங்களால் பயன்படுத்தப்படாத மீண்டெழும் செலவின ஒதுக்கீடுகளிலிருந்து மீதமுள்ளவற்றிலிருந்து பூர்த்தி செய்யப்படும். 2026 ஆம் ஆண்டில் பொதுப் பணிகளுக்காகச் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை, 2026 ஆம் ஆண்டின் இறுதி வரை

பயன்படுத்த அனுமதிக்கும் பொருட்டு, மேற்கண்ட ஒதுக்கீட்டுத் தேவையானது, பல்வேறு காரணங்களால் பயன்படுத்தப்படாத மீண்டெழும் செலவின ஒதுக்கீடுகளிலிருந்து மீதமுள்ளவற்றிலிருந்து பூர்த்தி செய்யப்படும். அதன்படி, 2026 ஆம் ஆண்டிற்குள் பயன்படுத்த திட்டமிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 7 இற்கிணங்க, தித்வா நிவாரணத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட, ஆனால் பல்வேறு காரணங்களால் 2026 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட வாய்ப்பில்லை எனக் கண்டறியப்பட்ட, 'செலவினத் தலைப்பு இல. 240-2-04-000-1504-000-11 இன் கீழுள்ள எஞ்சிய ஒதுக்கீடுகளை முடக்க வேண்டியுள்ளதுடன், இந்த ஒதுக்கீடுகளை எரிசக்தி அமைச்சின் கீழுள்ள செலவினத் தலைப்பு 119-1-02-011-1504-005-11 மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள செலவினத் தலைப்பு 102-1-02-040-1501-033-11 ஆகியவற்றிற்கு மாற்ற வேண்டியது அவசியமாகும்.

நிதி ஒதுக்கீடுகளில் செய்யப்படும் இந்தச் சரிசெய்தலுக்கு, அரசாங்கத்தின் கடன் வரையறையில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

குழுவின் அவதானிப்புக்கள்

கலந்துரையாடலின் பின்னர் குழு பின்வருவனவற்றினை அவதானித்தது;

- ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கான வாகன டீசல் மானியத்திற்காக 41 பில்லியன் ரூபாவும், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான அஸ்வெசும பயனாளிகளுக்கான மேலதிகக் கொடுப்பனவுகளுக்காக 6 பில்லியன் ரூபாவும் உள்ளடங்கலாக மொத்தம் 47 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மிகவும் வறிய பிரிவினருக்கு நவம்பர் மாதத்தில் 3,000 ரூபாவும் டிசம்பர் மாதத்தில் 3,250 ரூபாவும், வறிய பிரிவினருக்கு ஒவ்வொரு மாதமும் 2,000 ரூபாவும் மேலதிகக் கொடுப்பனவுகளாக வழங்கப்படவுள்ளதாகவும் குழு மேலும் அவதானித்தது.

- இடைக்காலப் பிரிவினர் (transient category) மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் (vulnerable category) ஆகியோருக்கான கொடுப்பனவுகள் படிப்படியாக நிறுத்தப்பட்டு வந்தன.

- பிரதேச செயலக மட்டத்தில் மேன்முறையீட்டுக் குழுவொன்று (appeal committee) நிறுவப்பட்டிருந்ததுடன், மேன்முறையீடுகளை மதிப்பீடு செய்வதற்கு ஒரு மாத காலம் ஒதுக்கப்பட்டிருந்தது. 2023ஆம் ஆண்டில் சுமார் 1.1 மில்லியன் மேன்முறையீடுகளும் 80,000 ஆட்சேபனைகளும் (objections) கிடைக்கப்பெற்றிருந்த நிலையில், தற்போது ஆட்சேபனைகளின் எண்ணிக்கை சுமார் 500 ஆகக் காணப்பட்டதாகவும் குழு அவதானித்தது. மீள்சான்றளிப்பு (re-certification) நடவடிக்கைக்காக, கிராம உத்தியோகத்தர் ஒருவரும் மற்றுமொரு அரச உத்தியோகத்தரும் அடங்கிய மதிப்பீட்டுக் குழுவினர் சம்பந்தப்பட்ட குடும்பத்தின் நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக அக்குடும்பத்தைச் சந்திப்பர். அதன் பின்னர், தெரிவுக் குழு தேவையான தீர்மானத்தை மேற்கொள்ளும் என்றும் குழு அவதானித்தது.

- ஜனவரி முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் சுத்திகரிப்பு (refinery) நிலையத்தின் உள்ளார்ந்த இலாபம் (implied profit) 417.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. சுத்திகரிப்பு நிலையம் இல்லாதிருந்தால் எரிபொருள் இறக்குமதிக்காகச் செலவிடப்பட்டிருக்கும் தொகையுடன் ஒப்பிடுகையில், சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாட்டினால் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்ட சேமிப்பையே இந்தத் தொகை பிரதிபலித்தது.

- விமான எரிபொருள் தேவையில் சுமார் 65 சதவீதமும், உலை எண்ணெய் (furnace oil) தேவையில் 100 சதவீதமும் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. பெற்றோல் தேவையில் சுமார் 10 சதவீதமும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) மொத்த விநியோகத்தில் 30 சதவீதமும் உள்நாட்டிலேயே சுத்திகரிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்டதாகவும் குழு மேலும் அவதானித்தது. 2026ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில், CPC ஆனது 4.49 பில்லியன் லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட வாகன டீசலையும், 4.6 பில்லியன் லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட 92 ஒக்டேன் பெற்றோலையும் இறக்குமதி செய்திருந்ததாகவும் குழு அவதானித்தது.

- டீசல் சந்தையில் CPC இன் சந்தைப் பங்கு ஜனவரி மாதத்தில் 60 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில், தற்போது அது 77 சதவீதமாக அதிகரித்திருந்தது. குறித்த நிறுவனங்கள் எதிர்கொண்ட நட்டம் காரணமாக அவற்றின் விநியோக அளவுகள் குறைந்ததைத் தொடர்ந்து, RM Parks, Sinopec மற்றும் Shell ஆகிய நிறுவனங்களின் சந்தைப் பங்குகள் படிப்படியாகக் குறைந்திருந்தன.

- சுத்திகரிப்பு நிலையத்தை CPC இலிருந்து தனியாகப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. இது தொடர்பாக, ஏனைய எரிபொருள் சில்லறை விற்பனையாளர்களின் தாய் நிறுவனங்கள் வெளிநாடுகளில் சுத்திகரிப்பு நிலையங்களைக் கொண்டிருப்பதால், அவை தமது சொந்த சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்து உள்நாட்டில் விநியோகிக்க முடியும் என CPC இன் தவிசாளர் தெரிவித்த பதிலை குழு கவனத்தில் கொண்டது.

- எரிசக்தி அமைச்சுக்கும் வெளிநாட்டு எரிபொருள் சில்லறை விற்பனையாளர்களுக்கும் (foreign fuel retailers) இடையிலான ஒப்பந்தங்களில் உச்சபட்ச விலை (ceiling price) குறிப்பிடப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட சூத்திரத்தின்படி குறித்த நிறுவனங்களால் கணக்கிடப்படும் சில்லறை விலையினால் நட்டம் ஏற்படும் சந்தர்ப்பங்களில், அந்த வித்தியாசத் தொகையை திறைசேரி ஏற்க வேண்டும் எனவும் ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், CPC இன் விலை நிர்ணயச் சூத்திரப் பட்டியல்களை (price formula sheets) மாத்திரமே அமைச்சு வெளியிட்டிருந்ததுடன், ஏனைய எரிபொருள் சில்லறை விற்பனையாளர்களின் விலை நிர்ணயச் சூத்திரப் பட்டியல்கள் வெளியிடப்படவில்லை என்றும் குழு அவதானித்தது.

- வெளிநாட்டு எரிபொருள் சில்லறை விற்பனையாளர்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட இறக்குமதித் தரையிறக்கச் செலவுகளுக்கும் (landing costs), CPC இன் இறக்குமதித் தரையிறக்கச் செலவுகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. இது தொடர்பாக, இறக்குமதித் தரையிறக்கச் செலவுகளைத் தீர்மானிப்பதற்கு சிங்கப்பூர் பிளாட்ஸ் (Singapore Platts) அடிப்படையிலான அளவுகோலைப் (benchmark) பயன்படுத்துமாறு தவிசாளர் முன்வைத்த பரிந்துரையை குழு கவனத்தில் கொண்டது.

- ஹம்பாந்தோட்டையில் முன்மொழியப்பட்டிருந்த Sinopec சுத்திகரிப்பு நிலையத் திட்டம் முன்னெடுக்கப்படவில்லை. உற்பத்தியில் உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகிக்கப்பட வேண்டிய பங்கினை அதிகரிக்குமாறு Sinopec கோரியிருந்ததே இதற்குக் காரணமாகும்.

- எரிபொருளுக்குப் பொருந்தும் வரிக் கூறுகளில் கலால் வரியும் (Excise Duty) பெறுமதி சேர் வரியும் (VAT) உள்ளடங்கியிருந்தன. இவ்விரு வரிகளும் இணைந்து, ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 145 ரூபாவாகவும், அதில் 50 ரூபா ஒரு குறிப்பிட்ட வரிக் கூறாகவும், ஒரு லீற்றர் டீசலுக்கு 127 ரூபாவாகவும் காணப்பட்டன. மேலும், ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்க்கு (crude oil) 2.5 சதவீத துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL) பொருந்தியிருந்ததாகவும் குழு அவதானித்தது.

- இலக்கு வைக்கப்பட்ட எரிபொருள் மானியங்களை (targeted fuel subsidies) அறிமுகப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்தன.

<u>குழுவின் விதப்புரைகள்</u>

பரிசீலனையின் பின்னர் குழு பின்வருவனவற்றினை விதந்துரைத்தது;

- அஸ்வெசும நலன்புரிப் பயன்கள் திட்டம் மற்றும் பயனாளிகளைச் சரிபார்க்கும் நடைமுறை (verification process) தொடர்பாக அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை, அண்மைய குடும்ப வருமானம் மற்றும் செலவின ஆய்வின் (HIES) தரவுகளைக் கருத்திற்கொண்டு மீளாய்வு செய்வதற்காக, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடனும் (DCS), சமூகப் பாதுகாப்புச் சபையுடனும் (Social Security Board) கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட வேண்டும்.

- எரிபொருள் சில்லறை விற்பனையாளர்களிடையே பாரிய விலை வேறுபாடுகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, விலை நிர்ணயச் சூத்திரத்தில் (pricing formula) இறக்குமதித் தரையிறக்கச் செலவுகளைத் (landed costs) தீர்மானிப்பதற்கு சிங்கப்பூர் பிளாட்ஸ் (Singapore Platts) அடிப்படையிலான அளவுகோலைப் (benchmark) பயன்படுத்துவது குறித்து எரிசக்தி அமைச்சு பரிசீலிக்க வேண்டும்.
- நுகர்வோர் நலன் மற்றும் எரிபொருள் சில்லறை விற்பனைச் சந்தையில் நிலவும் போட்டி ஆகிய இரண்டிற்கும் இடையில் சமநிலையைப் பேணும் வகையில், எரிபொருளுக்கான உச்சபட்ச விலையை (ceiling price) எரிசக்தி அமைச்சு அறிவிக்க வேண்டும்.

- **1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் (2026 ஒக்தோபர் 01 ஆம் திகதிய 2508/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)**

<u>அறிமுகம்</u>

தேசிய பொருளாதாரம், பொதுச் சுகாதாரம் மற்றும் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கில், 304 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள 161 வகையான பொருட்களை இறக்குமதி செய்யும் போது, அவற்றின் தரநிலைகள் மற்றும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும் ஒழுங்குவிதிகள், 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டு, 2024 மே மாதம் 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டன.

அதேவேளை, உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு நியாயமான போட்டித் தன்மையையுடைய சூழலை உறுதிப்படுத்துதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன், பயணிகள் மோட்டார் வாகனங்களுக்காகப் பயன்படுத்தப்படும் டயர்கள் மற்றும் முச்சக்கர மோட்டார் வண்டிகளுக்கான காற்று நிரப்பப்பட்ட டயர்கள் ஆகிய இறக்குமதி செய்யப்படும் டயர் வகைகளுக்கான இறக்குமதி பரிசோதனை நடைமுறையை, அதாவது இலங்கைத் தரநிலைகளை நிர்ணயிப்பதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு பரிந்துரை செய்துள்ளது. இதற்கமைய, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்களை உள்ளடக்கி புதிய ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, பயணிகள் மோட்டார் வாகன டயர்கள் (HS குறியீடு 4011.10.90) இறக்குமதிக்காக இலங்கை கட்டளைகள் 1212 ஐ நிர்ணயித்து மற்றும், முச்சக்கர மோட்டார் வண்டிகளுக்கான காற்று நிரப்பப்பட்ட டயர்களுக்கான (HS குறியீடு 4011.90.10) இறக்குமதிக்காக இலங்கை கட்டளைகள் 1347 ஐயும் நிர்ணயித்து, 2026 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் விதிக்கப்பட்டு, 2026 ஒக்டோபர் 01 ஆம் திகதிய 2508/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்குவிதிகள் 2027 சனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

<u>குழுவின் அவதானிப்புக்கள்</u>

கலந்துரையாடலின் பின்னர் குழு பின்வருவனவற்றினை அவதானித்தது;

- இறக்குமதித் தீர்வைகளை (para-tariffs) நீக்குவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைப் பொதியின் (policy package) ஒரு பகுதியாக, 304 HS குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்படும் பொருட்களுக்கான தரநிலைகள் வெளியிடப்பட்டிருந்தன. பயணிகள் வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் பயன்படுத்தப்படும் டயர்களுக்கான தரநிலைகளையும் வெளியிடுமாறு கைத்தொழில் துறையினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

- மூன்று மாத காலச் சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், வர்த்தகத் திணைக்களத்தின் (Department of Commerce) ஊடாக உலக வர்த்தக அமைப்பிற்கு (WTO) அறிவிக்கப்பட்டு வந்தது. தேவை ஏற்படின், இச்சலுகைக் காலத்தை நீடிக்கவும் முடியும்.

- குறித்த தரநிலைகள் சர்வதேச தரப்படுத்தல் அமைப்பின் (ISO) தரநிலைகளுக்கு இணையானவையா என்றும், அதே தரநிலைகள் ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் வினவப்பட்டபோது, இலங்கையில் வாகனங்கள் ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியாவில் உள்ள வாகனங்களை விட அதிக சுமைகளை ஏற்றிச் செல்வதைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் நிலைமைகளுக்கு ஏற்றவாறு சர்வதேச தரநிலைகள் சிறிய அளவில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. முச்சக்கர வண்டிகளுக்கான டயர் தரநிலைகளை உருவாக்கும்போது இந்தியத் தரநிலைகளும் கருத்திற்கொள்ளப்பட்டிருந்தன.

- டயர்களைப் பரிசோதிப்பதற்குத் தேவையான முழுமையான ஆற்றல் இலங்கை தர நிர்ணய நிறுவகத்திடம் (SLSI) இருக்கவில்லை. அதற்குத் தேவையான பரிசோதனைத் திறனை (testing capacity) ஏற்படுத்துவதற்கான கொள்வனவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் கீழ், இறக்குமதியாளர்கள் ஏற்றுமதி செய்யும் நாட்டிலேயே சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், வெளிநாட்டு ஆய்வுகூடங்களின் சான்றிதழ்களின் செல்லுபடித்தன்மையை SLSI உறுதிப்படுத்த முடியும் என்றும் குழு மேலும் அவதானித்தது. அதற்கமைய, அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுத் தரச் சான்றிதழ் (accredited foreign quality certification) கிடைக்காத சந்தர்ப்பங்களில் மாத்திரமே உள்நாட்டுச் சான்றிதழ் பெறுவது அவசியமாகும்.

- 18 உற்பத்தியாளர்கள் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்திருந்ததுடன், திண்ம நியூமேட்டிக் டயர்களை (solid pneumatic tyres) உற்பத்தி செய்யும் எட்டு உற்பத்தியாளர்களும் காணப்பட்டனர்.

குழுவின் விதப்புரைகள்

பரிசீலனையின் பின்னர் குழு பின்வருவனவற்றினை விதந்துரைத்தது;

- டயர் கைத்தொழில் துறை தொடர்பான பின்னணிக் குறிப்பு (background note) ஒன்றைத் தயாரித்து, அதன் உற்பத்தித் திறன், ஆற்றல்கள் (capabilities), சந்தைப் பங்கு (market share) மற்றும் அத்துறையில் உள்ள முக்கிய பங்குதாரர்கள் (key industry players) பற்றிய தகவல்களுடன் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
- டயர் தரநிலைகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட வேண்டும். இதன் மூலம், தேவையான பரிசோதனை வசதியை (testing facility) நிறுவுவதற்கும், குறித்த துறையினர் தரநிலைகளுக்கு இணங்குவதற்கும் இலங்கை தர நிர்ணய நிறுவகத்திற்கு (SLSI) மேலதிக கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

குழுவின் தீர்மானம்

பரிசீலனை செய்த பிறகு,

- **2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் செலவினத் தலைப்புகள் 119 மற்றும் 102 - நிகழ்ச்சித்திட்டம் 01 ன் கீழான குறைநிரப்புத் தொகை**
- **1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்** (2026 ஒக்தோபர் 01 ஆம் திகதிய 2508/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது)

உடன் குழு உடன்பட்டு அதனை அங்கீகரித்தது.

அதன்படி, அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கையை அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்களினால் 2026 நவம்பர் மாதம் 04 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டது.

Report of the Committee

The Committee on Public Finance at its meeting held on 03rd November 2026 considered the following Supplementary Sum and Regulations;

- **Supplementary Sum under Head 119 and Head 102 of Programme 01 of the Appropriation Act No. 23 of 2025 for the services of the financial year commencing on 01st January, 2026, and ending on 31st December, 2026**

  (Presented to Parliament on 03rd November 2026 and referred to the Committee)

- **Regulations under the Imports and Exports (Control) Act, No. 1 of 1969 (Published in the Gazette Extraordinary No. 2508/27 of 01st October 2026)**

  (Presented to Parliament on 03rd November 2026 and referred to the Committee)

Date Considered by the Committee: 03rd November 2026 **Time: 02.00 p.m.**

Members of the Committee on Public Finance Present

1. Hon. (Dr.) Harsha de Silva, M.P., (Chair)
2. Hon. Chathuranga Abeysinghe, M.P.,
3. Hon. Ravi Karunanayake, M.P.,
4. Hon. Harshana Rajakaruna, M.P.,
5. Hon. Shanakiyan Rajaputhiran Rasamanickam, M.P.,
6. Hon. Ajith Agalakada, M.P.,
7. Hon. M.K.M. Aslam, M.P.,
8. Hon. Nimal Palihena, M.P.,
9. Hon. Wijesiri Basnayake, M.P.,
10. Hon. Sunil Rajapaksha, M.P.,
11. Hon. Thilina Samarakoon, M.P.,

- **Supplementary Sum under Head 119 and Head 102 of Programme 01 of the Appropriation Act No. 23 of 2025 for the services of the financial year commencing on 01st January, 2026, and ending on 31st December, 2026**

Introduction

Approval of the Cabinet of Ministers has been granted to provide further relief to the people affected by the war situation in the Middle East. Accordingly, it is proposed to provide a price subsidy for Auto Diesel/Industrial Diesel, excluding Super Diesel, for the months of October, November and December 2026, and an additional allowance to families registered under the Extremely Poor and Poor categories of the Aswesuma Programme.

The requirement for the above allocations will be met through savings from recurrent expenditure provisions allocated in 2026 for providing relief in connection with the Ditwah emergency disaster situation, which remain unspent due to various reasons and have been identified as unlikely to be utilised during 2026.

Accordingly, it is required, in terms of Section 7 of the Appropriation Act, No. 23 of 2025, to freeze the remaining provisions under Vote Particular 240-2-04-000-1504-000-11, allocated for providing relief in connection with the Ditwah disaster situation for the year 2026, and to readjust such provisions under Vote Particular 119-1-02-011-1504-005-11 of the Ministry of Energy and Vote Particular 102-1-02-040-1501-033-11 of the Ministry of Finance, Planning and Economic Development.

This adjustment of budgetary provisions does not require a revision of the Government's borrowing limit.

Observations of the Committee

The Committee observed the followings;

- An allocation of LKR 47 billion had been made, comprising LKR 41 billion for the auto diesel subsidy for the period from October to December and LKR 6 billion for additional allowances to Aswesuma beneficiaries for November and December. The Committee further observed that the additional allowances would be provided at the rates of LKR 3,000 for November and LKR 3,250 for December for the severely poor category, and LKR 2,000 for each month for the poor category.
- The transient and vulnerable categories were being phased out.
- An appeal committee had been established at the Divisional Secretariat level, with a period of one month allocated for the assessment of appeals. The Committee further observed that, in 2023, approximately 1.1 million appeals and 80,000 objections had been received, whereas the number of objections currently stood at approximately 500. The Committee also observed that, for the purpose of re-certification, an assessment team comprising a Grama Niladhari officer and another government official would visit the relevant household to assess its circumstances, following which the selection committee would make the necessary determination.
- The implied profit of the refinery for the period from January to September amounted to USD 417.8 million, representing the estimated savings in fuel import costs attributable to the operation of the refinery, compared with a scenario in which the refinery did not exist.
- Approximately 65% of aviation fuel and 100% of furnace oil requirements were produced by the Sapugaskanda Refinery. The Committee further observed that approximately 10% of petrol requirements and 30% of the total supply of the Ceylon Petroleum Corporation (CPC) were refined and processed locally. The Committee also observed that, during 2026 to date, the CPC had imported 4.49 billion litres of refined auto diesel and 4.6 billion litres of refined Petrol 92.
- The CPC's market share in the diesel market had increased from 60% in January to 77% at present, while the market shares of RM Parks, Sinopec and Shell had gradually declined due to reductions in their respective supply volumes as a result of the losses incurred by those companies.
- Discussions had taken place regarding the possibility of separating the refinery from the CPC. In this regard, the Committee noted the response of the Chairman of the CPC that the parent companies of other fuel retailers owned refineries overseas and should therefore be able to import fuel from their own refineries and distribute it locally.
- The agreements between the Ministry of Energy and the foreign fuel retailers stipulated a ceiling price and that, where the retail prices calculated by those companies in accordance with the prescribed formula resulted in a loss, the difference was required to be borne by the Treasury. However, the Committee observed that only the CPC's price formula sheets were published by the Ministry, while those of the other fuel retailers were not disclosed.
- There were significant variations between the individual landing costs of foreign fuel retailers and those of the CPC. In this regard, the Committee noted the suggestion made by the Chair to use the Singapore Platts-based benchmark for determining landed costs.
- The proposed Sinopec refinery in Hambantota had not proceeded, as Sinopec had requested an increase in the proportion of production to be supplied to the domestic market.
- The tax components applicable to fuel included Excise Duty and VAT, amounting to LKR 145 per litre of petrol, including a component of LKR 50, and LKR 127 per litre of diesel. The Committee further observed that a PAL of 2.5% was applicable to a barrel of crude oil.
- Discussions were underway regarding the introduction of targeted fuel subsidies.

Recommendations of the Committee

The Committee recommended the following;

- A discussion should be held with the Department of Census and Statistics (DCS) and the Social Security Board to review recent developments relating to the Aswesuma Welfare Benefit Scheme and the verification process, taking into consideration the latest Household Income and Expenditure Survey (HIES) data.
- The Ministry of Energy should consider using a Singapore Platts-based benchmark for landed costs in the pricing formula to avoid wide distortions amongst the retailers.
- The Ministry of Energy should announce a ceiling price for fuel that balances both consumer welfare and competition in the fuel retail market

- **Regulations under the Imports and Exports (Control) Act, No. 1 of 1969 (Published in the Gazette Extraordinary No. 2508/27 of 01st October 2026)**

Introduction

With the objective of safeguarding the national economy, public health, and the environment, Standardization and Quality Control Regulations has been promulgated under the Imports and Exports (Control) Act, No. 1 of 1969, and published in the Gazette Extraordinary No. 2384/35 dated May 17, 2024, to ensure standardization and quality assurance in the importation of 161 categories of goods classified under 304 Harmonized System (HS) Codes.

Meanwhile, with a view to ensuring a level playing field for local manufacturers and safeguarding consumer safety and protection, the Ministry of Industry and Entrepreneurship Development recommended imposing the import inspection scheme i.e. Sri Lanka Standards (SLS) to imported tyres namely passenger car tyres and pneumatic tyres for three wheeled motor vehicles. Accordingly, the Ministry of Finance, Planning and Economic Development decided to issue new regulations incorporating amendments to the Standardization and Quality Control Regulations under the Imports and Exports (Control) Act, No. 1 of 1969.

Consequently, the Imports and Exports (Control) Regulations No. 08 of 2026 were promulgated and published in the Gazette Extraordinary No. 2508/27 dated October 01, 2026, prescribing Sri Lanka Standard 1212 (SLS 1212) for the importation of passenger car tires (HS Code 4011.10.90) and Sri Lanka Standard 1347 (SLS 1347) for the importation of pneumatic tires for three wheeled motor vehicles (HS Code 4011.90.10). These Regulations shall come into force with effect from January 01, 2027.

Observations of the Committee

The Committee observed the followings;

- The standards had been issued for goods falling under 304 HS codes as part of the policy package aimed at eliminating para-tariffs, and the industry had made a request to issue standards for tyres used in passenger vehicles and three-wheelers.
- A three-month grace period had been provided, and the relevant Gazette notification was being communicated to the WTO through the Department of Commerce, with the grace period being extendable, if necessary.
- In response to an inquiry as to whether the standards were identical to ISO standards and why the same standards had not been adopted, it was stated that the standards had been slightly modified to suit Sri Lankan conditions, considering that the load carried by vehicles in Sri Lanka was heavier than that of vehicles in Europe and Australia. Indian standards had also been considered in formulating standards for three-wheeler tyres.

- The Sri Lanka Standards Institution (SLSI) did not have the full capacity to test tyres and that procurement was underway to establish the required testing capacity. The Committee further observed that, under the original Gazette notification, importers could obtain certification from the exporting country, while the SLSI could verify the validity of foreign laboratories. Accordingly, local certification would only be required where accredited foreign quality certification was unavailable.

- 18 manufacturers had registered with the Ministry of Industry and Entrepreneurship Development and that there were eight manufacturers of solid pneumatic tyres.

Recommendations of the Committee

The Committee recommended the following;

- A background note on the tyre industry, covering its production capacity, capabilities, market share and key industry players should be submitted to the Committee.

- The full implementation of the Gazette notification on tyre standards should be extended to provide additional time for the SLSI to establish the required testing facility and for the sector to conform with the standards.

Decision of the Committee

After consideration, the Committee agreed to;

- **Supplementary Sum under Head 119 and Head 102 of Programme 01 of the Appropriation Act No. 23 of 2025 for the services of the financial year commencing on 01st January, 2026, and ending on 31st December, 2026**

- **Regulations under the Imports and Exports (Control) Act, No. 1 of 1969 (Published in the Gazette Extraordinary No. 2508/27 of 01st October 2026)**

and accordingly decided that the Report of the Committee on Public Finance thereon be presented to Parliament by the Hon. (Dr.) Harsha de Silva, the Chair of the Committee on Public Finance, on 04th November 2026.

Annexure I

Officials Present

Ministry of Finance
Mr. A.N. Hapugala - Deputy Secretary to the Treasury

Department of Trade and Investment Policy
Ms. G.H.H. Gamage - Assistant Director

Department of National Budget
Ms. M. Anoma Nandani - Additional Director General
Mrs. P.L.D.P. Senarathna - Director
Mr. S.C. Senarathna - Director
Ms. R.A.P. Rajapaksha - Director
Ms. M.S.F. Hanassa - Deputy Director

Department of Public Enterprises
Mrs. A.G.M. Dilhani - Director
Mrs. W.E. Godagama - Deputy Director

Department of Project Management and Monitoring
Mr. L.J. Bambarabotuwa - Additional Director General

Sri Lanka Customs
Mr. C.S.A. Chandrasekara - Additional Director General
Mr. H.M.N.S. Rajaguru - Senior Deputy Director
Mr. B.D.S.A. Wijewardena - Senior Deputy Director
Mr. A. Jaleel - Deputy Director

Import & Export Control Department
Mrs. T.T. Upulmalee Premathilaka - Controller General

Welfare Benefits Board
Mr. Nimal Kotawalagedara - Chairman
Mr. S.U. Chandrakumaran - Deputy Project Director
Mr. P.S. Ariyarathne - IT Specialist
Mr. D.L.P. Rishan Dharmasena – Acting Additional Commissioner
Mr. S.T.P.J. Perera - Acting Additional Commissioner
L.N.S. Perera - Assistant Commissioner
Ms. H.D. Kaluarachchi - Assistant Commissioner

Ministry of Industry and Entrepreneurship Development
Mrs. M.N.F Shahina – Director Sector II

Ministry of Trade, Commerce, Food Security and Cooperative Development
Mr. Upul Shantha De Alwis - Additional Secretary
Mr. Kumudu Meegahage - Director -Ministry of Trade, Commerce, Food Security & Co- operative Development

Consumer Affairs Authority
Ms. N. Jeganathan, Director Pricing & Management
Ms. J.M.G.T.S Jayasundera, Legal and enforcement officer

Ministry of Science and Technology
Mr. S. H. S. Mahagama, Director (Laboratories)

Sri Lanka Standards Institute
Dr. (Mrs) Siddhika G Senaratne, Director General
Ms. M. B. D. Neelakanthi, Deputy Director General

Ministry of Energy
Mr. G. M. R. D. Aponsu – Secretary
Mr. C. A. Suneth Lochana - Additional Secretary (Development)
Ms. K. H. M. K. Dayananda – Chief Financial Officer

National System Operator (Private) Limited

Dr. B.L. Pradeep Priyadarshana Perera – Chairman
Mr. R. Sasanka Ranjith – Chief Engineer

Ceylon Petroleum Corporation

Mr. Janaka Rajakaruna, Chairman
Dr. N.K.M.C. Nettikumarage, Managing Director
Mrs. B.T.T. Perera, Deputy General Manager (Finance)
Mr. R.M.U.S. Rathnayake, Manager (Finance)
Mr. W.M.T. Wijesinghe, Manager (Trade)